

மகளாற்றுப்படை

ச. கந்துசாமி

சுடர்விழிப் பதிப்பகம்
புதுகும்முடிப்பூண்டி – 601201

வெளியீடு எண் : 12

மகளாற்றுப்படை

முதற்பதிப்பு : ஜூன் 2023

ஆசிரியர் : ச. கந்தசாமி

உரிமை : ஆசிரியருக்கு

நூற்பொருள் : மரபுகவிதைகள்

படிகள் : 1000

பக்கங்கள் : 48

அளவு : டெம்மி 1/8

தாள் : 18.6 மேப்லித்தோ

விலை : ரூ. 50

அச்சிட்டோர் : **ஸ்ரீ மூகாம்பிகை ஹைடெக் பிரிண்டர்ஸ்**
வாணியர் தெரு,
ஜாம்பஜார் மார்க்கெட் எதிரில்,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005.
கைபேசி எண் : 94440 75315.

நூல் வெளியீடு : **சுடர்விழிப் பதிப்பகம்**
10/56, கரும்புக் குப்பம், புதுகும்முடிப்பூண்டி,
கும்முடிப்பூண்டி வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம் – 601 201.
கைபேசி எண் : 94449 27426.



பேராசிரியர்
தமிழ்ச்சுடர்.வ. விசயரங்கன்,
நிறுவனர், செந்தமிழ்ச்சோலை,
கும்மிடிப்பூண்டி.

அணிந்துரை

அரசு துறையில் உயர் அலுவலராகப் பணியாற்றி வரும் தமிழன்பர் திரு. ச. கந்தசாமி அவர்கள் சிறந்த சிந்தனையாளர்; பகுத்தறிந்து முடிவு செய்யும் நுண்மாண்நுழைபுலத்தார்; விழுமிய பண்புகள் இயல்பாகவே அமையப் பெற்ற அன்பு மனத்தார்; செந்தமிழ் மீது பற்றும் இலக்கியங்களில் தோயும் ஆர்வமும் வாய்க்கப் பெற்றவர்.

தற்போது இவர் 'மகளாற்றுப்படை' என்னும் கவிதை இலக்கியத்தைப் படைத்துத் தமிழுலகிற்குக் கொடையாக வழங்கியுள்ளார். இந்நூல் வெண்பா வடிவில் அமைந்துள்ள கவிதை இலக்கியமாகும். ஏற்கெனவே 'சென்பா நாற்பது' என்னும் வெண்பா வடிவிலான கவிதை நூல் ஒன்றையும் இவர் படைத்துள்ளார். அந்த வகையில் பார்க்கும் போது, மரபு கவிஞர் வரிசையில் இடம் பெறத்தக்கவராய் விளங்குகின்றார் எனக் கூறுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். யாப்பிலக்கணம் கற்று மரபு கவிதை எழுதும் கவிஞர்கள் அருகி வரும் இக்காலத்தில், இவர்தம் இலக்கியப் பணி வரவேற்புக்குரியதாய் அமைகின்றது.

'ஆற்றுப்படை' என்பது சங்ககாலப் புலவர்கள் இலக்கியம் படைப்பதற்குக் கையாண்ட பல்வேறு உத்தி முறைகளுள் ஒன்றாகும். ஒரு தலைவனைப் பாடிப் பரிசு பெற்று வரும் புலவன் அல்லது பாணன் அவ்வாறு பரிசு பெறவரும் மற்றொரு புலவன்

அல்லது பாணனை இன்ன வழியாகச் சென்று இன்ன தலைவனை அணுகினால் பரிசு பெறலாம் என வழிப்படுத்தி அனுப்புவதாகப் பாடப்படுவது ஆற்றுப்படை இலக்கியமாகும். இந்த ஆற்றுப்படை இலக்கியங்கள் சங்க காலத்தில் மட்டுமல்லாமல் பிற்காலத்திலும் சிற்சிலரால் பாடப்பட்டுள்ளன. அவற்றின் தொடர்ச்சியாகக் கவிஞர் ச. கந்தசாமி அவர்களின் மகளாற்றுப்படையும் அமைந்துள்ளது எனக் கூறலாம்.

இந்நூல் எக்காரணம் பற்றி இயற்றப்பட்டது என்பதைக் கவிஞர் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். ‘‘மகளுக்கு அவளது குழந்தைப் பருவ மகிழ்ச்சி தரும் நினைவுகளைப் பாடல் வடிவில் தெரிவித்துத் தமிழ் மொழியின் மீதும், இனிய தமிழ்ப் பாடல்களின் மீதும் ஆர்வத்தினை ஏற்படுத்த ஆற்றுப்படுத்துவதால் இது ‘மகளாற்றுப்படை’ என்பது கவிஞரின் நூல் தலைப்புக்கான விளக்கம். தமிழ் மீது தீராத நேயம் கொண்ட கவிஞர் தமிழ் இலக்கியங்களில் தோய்ந்து இன்புற்று அறிவுப்பயன் என்னும் பரிசைப் பெற்று வருபவர். அவ்வாறே தம்மகளும் தமிழின்பால் பற்றுக் கொண்டு தமிழ் வழிச் சென்று நல்லறிவுப் பரிசைப் பெற வேண்டும் என்னும் நோக்கில் ஆற்றுப்படுத்துகின்றார். ஆகவே ‘மகளாற்றுப்படை’ என்னும் தலைப்பு சாலப் பொருத்த முடையதாய் அமைந்துள்ளது.

சின்னச் சின்ன உணர்வுகளைச் செய்யுளில் படம் பிடித்து காட்டுவது என்பது நுட்பமான கலையாகும். வயதிலும் அறிவிலும் அனுபவத்திலும் வளர்ந்த தந்தை, மேற்சொன்ன மூன்றும் அற்ற மழலையிடம் உறவு கொள்வதற்கு வேண்டிய தகுதிகள் எவை என்று கேட்டால், அவர் வயதைத் துறக்க வேண்டும், அறிவை மறக்க வேண்டும், அனுபவத்தை இழக்க வேண்டும். அன்பு என்னும் விளையாட்டு பொம்மைகளைக் கொண்டு தானும் ஒரு குழந்தையாக மாறி அக்குழந்தையுடன் உறவாட வேண்டும். அதைத்தான் கவிஞர் ச. கந்தசாமி செய்திருக்கின்றார் இவர் இயற்றியுள்ள அறுபது பாடல்களிலும் இக்குழந்தமை உணர்வுகள் மேலோங்கி நிற்பதைக் காண முடிகின்றது.

தமிழ்த்தாயே தம்மகளாய் வந்து பிறக்க வேண்டும் எனக் கவிஞர் விரும்புகின்றார். தமக்கு மட்டுமல்லாமல் தமிழருக்கெல்லாம் பெருந்தாயாகச் செந்தமிழ் அன்னை விளங்குவதால் அவள் தம் மகளாக வரவேண்டும் என்னும் விழைவு இவர் உள்ளத்தில் வேரூன்றி நிற்கின்றது.

_____ _____ _____ - ‘‘பொற்றமிழேத்
தாயாய் தமிழருக்கு வாழ்வளித்தாய்; என்வாழ்வில்
சேயாய் வரவேண்டும் நீ ’’. என்னும் பாடல் அடிகள் இங்கு நினைக்கத் தக்கன.

மகளாற்றுப்படையில் வரும் ஏழாவது வெண்பா, பயில்பவர் மனக்கண்ணில் அழகிய வண்ண ஓவியமாயக் காட்சி வழங்குகின்றது. தந்தை தம் இருகைகளையும் ஒன்று சேர்த்து, உள்ளங்கைப் பரப்பில் மழலைச் செல்வத்தினை ஏந்தி மலர்முகத்தை பார்க்கின்றார். தந்தை உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வெள்ளைச் சிரிப்பை குழந்தை உதிர்க்கின்றது. அக்காட்சியானது தந்தையின் மனத்தை உருக்கி இன்பத்தைப் பெருக்குகின்றது. அச்சொல்லோவியம் இதோ!

‘இருகரத்தில் ஏந்தி மலர்முகம் காணப்
பெருகுதே உள்ளத்தில் இன்பம்! – அருமைத்
திருமகளே! எம்குலச் சொத்தேயென் நோய்க்கு
மருந்தாகும் உந்தன் சிரிப்பு.

இப்பாடல் ஒவ்வொருவரையும் தந்தையாக மாற்றித் தாளாத இன்பத்தில் ஆழ்த்தும் என்பது திண்ணம்.

குழந்தைகள் உண்ணாமல் அடம்பிடிப்பதும், அமுதக் கிண்ணத்தைத் தூக்கி எறிவதும் நேரத்திற்கு ஒரு குறும்பை நிகழ்த்துவதும் இயல்பாக நடப்பவையாகும். இவை இன்று நேற்றல்ல; ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே நடந்து வருகின்றன. தேன்கலந்த பாலுணவைப் பொற்கிண்ணத்தில் ஏந்திச் செவிலித் தாய்மார்கள் உண்ணுமாறு சிறுமி ஒருத்தியை வற்புறுத்துகிறார்கள். அவள் உண்ண மறுத்து ஓடி ஒளிகிறாள். அவள் வளர்ந்து பெண்ணாகி திருமணம் முடித்துக் கணவன் வீட்டிற்குச் சென்றபின், அங்கு ஏற்பட்ட வறுமையை ஒரு பொருட்டாக மதியாமல் இல்லறச் செம்மை காத்து வருகிறாள். அதைக் கண்ட செவிலித்தாய் தன் வளர்ப்பு மகளின் குழந்தை பருவத்து செல்வக் குறும்புகளையும், இல்லறக் காலத்தின் அறிவையும், ஒழுக்கத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து வியப்படைவதாக நற்றிணைப் புலவர் போதனார் பாடல் இசைக்கின்றார். அத்தகைய குறும்புகளை மகளாற்றுப்படையின் மழலைச் சிறுமியும் புரிகின்றாள். குறும்புகள் பயிற்சி எடுத்து வந்துச் செய்பவைபோல உள்ளனவாகக் கூறிப் பரவசமடைகின்றார் நூலாசிரியர்.

“உண்ணாமல் ஓட்டம் பிடிக்கிறாள்; பாலுண்ணும்
கிண்ணத்தைத் தூக்கி எறிகிறாள்; – எண்ணித்
தொலையாது போட்டுடைத்த பொம்மைகள்; கற்ற
கலைபோலச் செய்வாள் குறும்பு.”

மகளாற்றுப்படையில் வரும் 18–ம் வெண்பா, நம் கவிஞரைக் காளமேகப் புலவராய் மாற்றிவித்திருப்பதை அறிய முடிகின்றது. ஒரே சொல்லில் அல்லது ஒரே தொடரில் இரு வகைப் பொருள் பொதியுமாறு பாடுவதற்கு ‘இரட்டுற மொழிதல்’ அல்லது ‘சிலேடை’ எனப் பெயர் வழங்குவதுண்டு. அத்தகைய சிலேடைப் பாடலைக் கவிஞர் வடித்துக் கொடுத்துள்ளார்.

தந்தை குழந்தையோடு கூட குட்டிநாயையும் வளர்த்து வருகிறார். இரண்டின் செயல்பாடுகளும் ஒன்று போலவே உள்ளன. இந்த ஒற்றுமைச் செயல்கள் கவிஞரின் சிலேடை வெண்பாவிற்கு அழகிய வடிவம் கொடுத்துள்ளன என்றால் அது மிகையாகாது.

பாசத்தைக் காட்டுவதால்; மேலேறி ஆடுவதால்;
வாசத்தைத் தேடுவதால்; குன்றாத – நேசமுடன்
கட்டி அணைக்க மகிழ்வதால்; நானறிந்த
குட்டிநாயும் என்மகளும் ஒன்று.

பிரித்துப் பிரித்து பொருள் சொல்ல வேண்டிய அவசியம் இன்றி எளிதாகப் புரியும் இனிய சிலேடைப் பாவினை வழங்கியுள்ள கவிஞருக்கு உளம் கனிந்த வாழ்த்துக்கள்.

குழந்தை யாரிடம் அன்பு செலுத்துகிறதோ, அவர் முழுக்க முழுக்கத் தனக்கே சொந்தமாய் இருக்க வேண்டும் என்கிற சொத்துரிமை மனோபாவத்தைக் கொண்டிருக்கும். தாம் நேசிப்பவரை அடுத்தவர் எதைச் சொல்லவும் அனுமதியாது. தண்டிப்பதாய் இருந்தாலும் அதையும் தானே செய்யவேண்டும் என நினைக்கும். இந்த அடிமன உளவியலை கவிஞரின் 35–ம் வெண்பா படம் பிடித்துக் காட்டுகின்றது.

“என்னைத்தன் தாய்எதுவும் சொல்ல அனுமதியாள்;
என்னைத்தான் பெற்றெடுத்த பிள்ளைபோல் – எந்நாளும்
கண்டிப்பாய்ப் பார்க்கின்றாள்; தப்பென்றால் கொம்பெடுத்து
தண்டிப்பாள் தாயாய் எனை.”

இவ்வாறு நூலாசிரியர் ச. கந்தசாமி அவர்கள் உணர்வுச் சிதறல்களை எல்லாம் வெண்பாச் சித்திரங்களாய் தீட்டி வண்ண வண்ணக் காட்சிகளாய் வழங்கியுள்ள நுட்பம் பாராட்டுக்குரியது. சான்றுக்குச் சில வெண்பாக்களை எடுத்து நானறிந்த மட்டில் விளக்க முற்பட்டேன். கவிதை மீண்டும் மீண்டும் பயிலக்கூடியது. பயிலப் பயிலப் புதுப்புது நயங்களை வழங்கி இன்பம் தரத்தக்கது. அதனால்தான் 'நவில்தொறும் நூல்நயம்' வளரும் என வள்ளுவப் பெருந்தகை குறிப்பிடுகின்றார். அன்பர்கள் அனைவரும் மகளாற்றுப்படை வழியில் சென்று தமிழ்க் காதல் வளர்க்குமாறு வேண்டுகின்றேன். கவிஞர் மேன்மேலும் புதுமைப் படைப்புக்களை வழங்கித் தமிழுக்கு வளம் சேர்க்க வேண்டும் என்னும் விழைவைப் பதிவு செய்கின்றேன்.

இன்ப அன்புடன்

வ. விசயரங்கன்

புதுக்கும்மிடிப்பூண்டி,
04.04.2023

முன்னுரை

தமிழிலக்கியத்தில் பாடல்களுக்கும் பஞ்சமில்லை. பாடு பொருளுக்கும் பஞ்சமில்லை. காலம் தோறும் வெவ்வேறு வடிவங்களில், வெவ்வேறு வகைகளில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு வருகிறது தமிழ். அண்மையில் வெளிவந்த கவிஞர் ''ஆண்டன்பெனி'' அவர்களின் 'மகளதிகாரம்' தந்தை மகள் பாசத்தை வெளிப்படுத்திய ஒரு அருமையான புதுக்கவிதை முயற்சி. அதைப் படித்தபோது, நம்மிடமும் அதைப் போன்று பல அனுபவங்கள், செய்திகள் உண்டே... அவற்றை மரபுகவிதையாக வெண்பா வடிவில் வெளிப்படுத்தலாமே என்ற சிறு முயற்சிதான் 'மகளாற்றுப்படை' ஆக நீங்கள் வாசிப்பது.

மகளுக்கு, அவளது குழந்தைப் பருவ மகிழ்ச்சி தரும் நினைவுகளைப் பாடல் வடிவில் தெரிவித்துத் தமிழ் மொழியின் மீதும், இனிய தமிழ்ப் பாடல்களின் மீதும் ஆர்வத்தினை ஏற்படுத்த ஆற்றுப்படுத்துவதால், இது 'மகளாற்றுப்படை'. வெண்பா வடிவில் இயற்றப்பட்டுள்ள இப்பாடல்களில், மகளைப் பெற்ற தந்தையர் தம்மை அடையாளம் கண்டு கொண்டால்... மகிழ்ச்சி... வெண்பாக்களைச் சீர்படுத்தி செம்மையாக்கிய நண்பர் லோகநாதன் மற்றும் வரைகலை மூலம் மெருகூட்டிய நண்பர் ஆ. சார்லஸ் சுரேஷ் பாபு ஆகியோருக்கு நன்றி.

இந்நூலுக்கு அணிந்துரை நல்கிய தமிழ்ச்சுடர் பேராசிரியர் வ. விசயரங்கன் ஐயா அவர்களுக்கும். எனது வாழ்க்கை துணைவர் திருமதி. மு. சகிலா மற்றும் மகள் ச. க. எழில் ஆகியோருக்கும் நன்றியினை பதிவு செய்வதில் மகிழ்கிறேன்.

''மகளென்று தேவதையைப் பெற்றெடுத்த தந்தை
மகளிடம் காட்டுகின்ற பாசம் – அகலாதே
உற்றவுயிர் உள்ளளவும்; மெய்யிதனை வெண்பாவாய்
நற்றமிழில் பாடவந்தேன் நான்''.

ச. கந்தசாமி


பொருளடக்கம்

1. பைந்தமிழே காப்பு 4
2. சேயாய் வரவேண்டும் நீ 4
3. என்மகளைக் கா 5
4. தந்தாள் பரிசாக 6
5. என்மகள் ராணி 6
6. மகளாய் பிறந்திட்ட தாய் 7
7. மருந்தாகும் உந்தன் சிரிப்பு 8
8. வேரினில் காய்த்த பலா 8
9. குழந்தை என்தோளில் 9
10. வாராய் தவழ்ந்து 10
11. வந்தென்கை சேர் 10
12. தங்கச்சிலை 11
13. தாலாட்டு – 1 12
14. தாலாட்டு – 2 12
15. ஒவ்வொன்றும் இன்பமே 13
16. குறும்பு 14
17. வேண்டாம் சிகப்பு 14
18. குட்டிநாயும் என்மகளும் 15
19. ஒற்றைப் பருக்கை 16
20. நூறுவகை சிரிப்பு 16
21. மண்டியிட்டேன் நான் 17
22. கிச்சுகிச்சு மூட்டி 18
23. தின்னமிட்டாய் கேட்பாள் 18
24. நடிக்கிறேன் 19
25. பந்தாடு கண்ணே 20
26. ஊஞ்சலாடு 20
27. எத்தனை வேடம் 21
28. தொட்டால் விடமாட்டேன் 22
29. இரண்டுகண் பூச்சாண்டி 22
30. காளியாட்டம் ஆடிடுவாள் 23

31. பள்ளிக்குப் போகலாம் 24
32. பள்ளிக்குச் செல்கிறாள் 24
33. பைந்தமிழைப் படி 25
34. பெயரைச் சொல்லிச் சிரி 26
35. தண்டிப்பாள் தாயாய் 26
36. தலைவாரிப் பூச்சூடி 27
37. பள்ளி செல்ல வேண்டாமா 28
38. அப்பனென்று சொல் 28
39. அன்பில் கனிந்து 29
40. என்னைப் பிடிக்குமா 30
41. தங்கக் கிளி 30
42. எப்போதும் ராணி 30
43. கோலமெனச் சொல்வாள் 31
44. அடித்தாளா உன் அன்னை 31
45. என்மகளை அழச்செய்தாய் 31
46. அற்ற உயிர் 32
47. ஊசிமட்டும் வேண்டாம் 32
48. மன்னிப்புக் கேட்கிறேன் 32
49. பிறந்தநாள் 34
50. தஞ்சம் அடைகின்றாள் 34
51. சிப்பி 35
52. வண்ணத்தில் நிழல் 36
53. சுவரெல்லாம் ஓவியங்கள் 36
54. பெயரால் விளிக்கிறாள் 36
55. கைமாத்து 37
56. போர்க்குணம் 37
57. பொம்மைநான் 37
58. நன்றி மலர் 38
59. ஒன்றும் தெரியாத மக்கு 38
60. சித்தம் அழகியாள் ஆடுகிறாள் 39

1 பைந்தமிழே காப்பு

காலத்தால் மூதாட்டி; தன்னிளமை மாறாத
கோலத்தால் பைங்குமரி; தென்னவர் – சீலமிகு
பொன்மகள்; செம்மொழி நாயகி, பைந்தமிழே
என்மகள் நங்கைக்குக் காப்பு.



2 சேயாய் வரவேண்டும் நீ

பெற்றதாயே தன்மகளாய் வந்துதிக்க வேண்டுமென்று
நற்றவம் செய்திடுவார் நானிலத்தார் – பொற்றமிழேத்
தாயாய் தமிழருக்கு வாழ்வளித்தாய்; என்வாழ்வில்
சேயாய் வரவேண்டும் நீ.

3 என்மகளைக் கா

பண்பாட்டைத் தோற்றுவித்தாய்; செந்நாப் புலவர்கள்
பண்பாட ஊற்றெடுத்தாய்; செம்மாந்த – மண்ணிங்கு
வந்துதித்த மக்களையுன் ஆளுமையில் காத்திடுவாய்;
செந்தமிழே என்மகளைக் கா.



4 தந்தாள் பரிசாக



பெண்ணாநீ வேண்டுவது ஆண்மகவா என்றுகேட்டாள்
பெண்மகள்தான் வேண்டுமென்று பாசத்தில் நான்சொன்னேன்
அன்றென் மனைவியிடம்; தந்தாள் பரிசாக
இன்றெனக்கு உன்னைத்தான் ஈன்று.



5 என்மகள் ராணி

யாருமில்லை அவ்விடத்தில்; தாதியவள் என்கையில்
பேருமில்லாப் பெண்மகளைக் கையளித்தாள் – தேருமில்லா
மன்னவன்நான், என்மகள் ராணியைக் கண்டதும்
தென்னவர்கோன் ஆனேன் மகிழ்ந்து.


6 மகளாய் பிறந்திட்ட தாய்

பிள்ளையொன்று) இல்லாப் பெரும்பழி நீங்கப்பெண்
பிள்ளையாய் வந்துதித்த பொன்மலரே – உள்ளத்
திகட்டாத தெள்ளமுதே; நீயே எனக்கு
மகளாய் பிறந்திட்ட தாய்.



7 மருந்தாகும் உந்தன் சிரிப்பு

இருகரத்தில் ஏந்தி மலர்முகம் காணப்
பெருகுதே உள்ளத்தில் இன்பம்! – அருமைத்
திருமகளே! எம்குலச் சொத்தேயென் நோய்க்கு
மருந்தாகும் உந்தன் சிரிப்பு.





8 வேரினில் காய்த்த பலா

எத்தனை கோடி மகள்களும் தந்தையும்
இத்தரை மீதில் இருந்தனரோ? – அத்தனை
பேரிலும் நானொன்றும் வேறில்லை; ஆயினும்நீ
“வேரினில் காய்த்த பலா”.

9 குழந்தை என்தோளில்

குழந்தையை எப்போதும் உன்தோளில் தூக்கிப்
பழக்காதே என்கிறாய்; ஆனால் – மழலைப்பெண்
என்தோளில் உள்ளபோது தானே முழுமையாய்
என்னை உணர்கின்றேன் நான்.



10 வாராய் தவழ்ந்து

என்னவொரு ஆனந்தம் என்மகள் பூமுகத்தில்;
என்னவொரு உற்சாகம் தத்தித் தவழ்கையில்;
மெல்ல இருகைகள் ஊன்றி, முகம் பார்த்து
செல்லம்நீ வாராய் தவழ்ந்து.




11 வந்தென்கை சேர்

இருகரம் நீட்டி அழைக்கின்றேன் கண்ணே!
இருகரம் வீசி நடவாய் – திருமகளே!
தங்கத்தேர் மெல்ல நகர்வதைப்போல், தங்கமகள்
நங்கைநீ வந்தென்கை சேர்.

12 தங்கச்சிலை

நேசத்தில் என்னையும் வென்றவளே; செண்பகப்பூ
வாசத்தை எங்கும் சுமப்பவளே! – பாச
வலையினில் சிக்கிய மானானேன்; தங்கச்
சிலைபோல் வருவாய் நடந்து.



13 தாலாட்டு–1



ஆராரோ ஆரிராரோ கண்ணே உறங்கலையோ ?
யாராரோ யாரிவரோ கண்மூடித் தூங்கலையோ ?
தாலாட்டுப் பாடியுனைத் தூங்கவைக்கும் போதெல்லாம்
தாலாட்டித் தாயுமானேன் நான்.

14 தாலாட்டு–2

ராராட்டு நான்பாடி என்மகளைத் தொட்டிலில்
சீராட்டித் தூங்கவைப்பேன்; கண்ணயர்ந்து, சீமாட்டி
தூங்கிவிட்டாள் எண்ணெண்ணித் தொட்டிலுக்குள் கண்பார்த்தால்
தூங்காமல் பார்ப்பாள் சிரித்து.

15 ஒவ்வொன்றும் இன்பமே

அன்னம்போல் வெள்ளை மனதுடையாள்; அன்பினிய
சின்னவளின் செய்கைகள் ஒவ்வொன்றும் – இன்பமே;
இன்னமுதம் உண்டதுபோல் நான்மகிழ்வேன்; கண்ணெதிரே
அன்னவளைக் காணும் பொழுது.



16 குறும்பு

உண்ணாமல் ஓட்டம் பிடிக்கிறாள்; பாலுண்ணும் கிண்ணத்தைத் தூக்கி எறிகிறாள்; – எண்ணித் தொலையாது போட்டுடைத்த பொம்மைகள்; கற்ற கலைபோலச் செய்வாள் குறும்பு.



17 வேண்டாம் சிகப்பு

பொன்னில் வளையும் மகளின் விரல்களுக்கு மின்னுகின்ற மோதிரமும் செய்யலாம் – என்றும் மருத்தோன்றி மட்டும் இடவேண்டாம்; தாதி, ‘‘மலர்கரத்தில் வேண்டாம் சிகப்பு’’.

18 குட்டிநாயும் என்மகளும்

பாசத்தைக் காட்டுவதால்; மேலேறி ஆடுவதால்;
வாசத்தைத் தேடுவதால்; குன்றாத – நேசமுடன்
கட்டி அணைக்க மகிழ்வதால்; நானறிந்த
குட்டிநாயும் என்மகளும் ஒன்று.



19

ஒற்றைப் பருக்கை

எத்தனை ஊர்களில் ஏதேதோ நாட்டினில்
எத்தனை உண்டாலும், என்னம்மை வைத்துண்ணும்
கிண்ணத்தின் ஒற்றைப் பருக்கை சுவையதற்கு
விண்ணிலும் இல்லையே ஈடு.



20

நூறுவகை சிரிப்பு

கன்னம் குழிவிழப் பூப்போல் சிரித்திடுவாள்;
மின்னும் சுடர்போலப் புன்னகைப்பாள் – புன்னகையில்
நூறுவகை என்மகள் பூமுகத்தில் பார்ப்பதனால்
பேறுபெற்றேன் வாழ்விலே நான்.

21 மண்டியிட்டேன் நான்

அவளுக்கு நான்பொம்மை கொஞ்சி மகிழ்வாள்;
அவளுக்கு நான்அடிமை; ஆணைக்குச் சேவகம்
செய்வதற்கு காத்திருப்பேன்; வாகனம்என் மீதமர்ந்து
செல்வதற்கு மண்டியிட்டேன் நான்.



22 கிக்சுகிச்சு மூட்டி

கிச்சுகிச்சு மூட்டிச் சிரித்திடச் செய்கின்றாள்;
அச்சுவெல்லம் போன்ற மழலை மொழியில்
அசத்தி விடுகின்றாள்; என்மகள் என்றும்
உசத்திதான் காண்பாய் எனக்கு.






23 தின்னமிட்டாய் கேட்பாள்

சின்னவிழிப் பாப்பா கடைவீதி செல்கையில்
தின்னமிட்டாய் கேட்பாள்; தரவில்லை – என்றாலோ
நின்றே அடம்பிடிப்பாள்; வாங்கியப்பா தந்தாலோ
தின்று விடுவாளாம் மென்று.

24 நடிக்கிறேன்

எழுகவென்று தூங்குகின்ற என்னை அடித்தே
எழுப்புகின்றாள்; வேண்டுமென்றே நானும் – அழுது
துடிக்கின்றேன்; பூப்போல் சிரிக்கின்றாள் நன்றாய்
நடிக்கின்றேன் என்ப(து) அறிந்து.



25 பந்தாடு கண்ணே

செந்தாழம் பூவாய்ச் சிரித்து விளையாடு;
செந்தூரப் பொட்டுவைத்துத் தோழியரைச் சேர்ந்தாடு;
வந்தாடு மான்போல் வளையல் குலுங்கிட;
பந்தாடு நன்றாய் பயின்று.



26 ஊஞ்சலாடு

கட்டிக் கரும்பேயென் கண்மணியே ஊஞ்சலாடு!
சுட்டிக் குழந்தாய் சிறுமலரே ஊஞ்சலாடு!
ஊஞ்சலாடு கண்ணே உலகம் வளம்பெற;
ஊஞ்சலாடு பெண்ணே உவந்து.



27

எத்தனை வேடம்

மெத்தையென் மார்பு; முதுகுனக்கு அம்பாரி;
வித்தைகள் காட்டி மகிழ்விக்கும் கூத்தாடி;
எத்தனை வேடமிட்டேன் நானுனக்கு; கன்னத்தில்
முத்தமொன்று தாராய் மகிழ்ந்து.



28 தொட்டால் விடமாட்டேன்

அடித்திடப் போவதாய் என்னிடம் நண்பன்
நடிப்பதைப் பார்த்து, மழலை – வெடிக்கிறாள்;
என்னன்புத் தந்தையைத் தொட்டால் விடமாட்டேன்
என்பதாய்க் கண்ணால் சினந்து.




29 இரண்டுகண் பூச்சாண்டி

முரண்டு பிடிக்காதே கண்ணே! வருவான்
இரண்டுகண் பூச்சாண்டி; உன்னை – மரத்திலே
கட்டிவைத்துப் போய்விடுவான்; உண்பாயே வாய்திறந்து
குட்டிராணி அல்லவோ நீ.

30

காளியாட்டம் ஆடிடுவாள்

தொலைக்காட்சிப் பெட்டியினைத் தந்தத்தில் செய்த சிலைபோலப் பார்த்திருப்பாள்; யாரும் விலக்கிவிடல் ஆகாது; காளியாட்டம் ஆடிடுவாள்; கள்ளிக்கு போகாது கோபம் மறந்து.



31 பள்ளிக்குப் போகலாம்

நண்பருடன் ஆடலாம்; நல்லபாடம் கேட்கலாம்;
பண்புடன் வாழ்வதற்கே கல்வியாம் – அன்புமகள்
வள்ளிக்குப் புத்தகங்கள் வாங்கலாம்; நாளைநாம்
பள்ளிக்குப் போகலாம் வா.



32 பள்ளிக்குச் செல்கிறாள்

பள்ளிக்குச் செல்கிறாள் இன்று முதன்முறையாய் ;
கள்ளிக்கு முத்தமிட நான்சென்றால் – தள்ளி
விடுகின்றாள், தாமதித்தல் ஆகாதாம்; சொல்லி
விடுகின்றாள், “அப்புறம் தா”.



33 பைந்தமிழைப் படி

வான்நிலவே வையத்தில் தண்ணெழில் காட்டிநீயும்
நான்மகிழ வந்தனையோ; ஞாலமுதல் – தொன்மொழியாம்
செந்தமிழில் பாட்டுனக்குப் பாடவந்தேன்; பெண்மகளே
பைந்தமிழைப் பாங்காய் படி.



34 பெயரைச்சொல்லிச் சிரி

பரிசொன்றும் வேண்டாமாம் பூக்களுக்கு; செல்லம்
வரிசையாய் தம்பெயரைச் சொல்லிச் – சிரித்தாலே
போதுமாம்; தாம்பூத்த பேறனைத்தும் கிட்டுமாம்,
கீதமாய் சொல்வதைக் கேட்டு.



35 தண்டிப்பாள் தாயாய்

என்னைத்தன் தாய்எதுவும் சொல்ல அனுமதியாள்;
என்னைத்தான் பெற்றெடுத்த பிள்ளைபோல் – எந்நாளும்
கண்டிப்பாய்ப் பார்க்கின்றாள்; தப்பென்றால் கொம்பெடுத்துத்
தண்டிப்பாள் தாயாய் எனை.



36 தலைவாரிப் பூச்சூடி



முகமெல்லாம் வண்ணத்தைப் பூசி விடுவாள்;
அகமெல்லாம் பூக்கத் தலைவாரிப் பூச்சூடிப்
பொட்டிடுவாள் கன்னமெங்கும்; அத்தனைக்கும் புன்சிரிப்பைக்
கொட்டிடுவேன் ஊமையாய் நான்.

37 பள்ளிசெல்ல வேண்டாமா

அடிபெண்ணே! காலை மலர்ந்தது காணாய் ;
படிப்பதற்கு பள்ளிசெல்ல வேண்டும் – துடித்து
எழுந்திடம்மா; தோழியர்கள் வந்துவிட்டார், மாலை
விழுந்தபின் தூங்கு தொடர்ந்து.



38 அப்பனென்று சொல்

செல்லமகள் கண்ணம்மா அம்முத்தாய் பைங்கிளி
அல்லிராணி தங்கநிலா பொன்மலர் – வல்லியென
உன்னைநான் ஆயிரம் பேரிட்(டு) அழைத்திடுவேன்
என்னைநீ அப்பனென்று சொல்.



39 அன்பில் கனிந்து

அரவமின்றி சின்னயிலை நீர்ப்பரப்பில் வீழ்ந்து
பரவுகின்ற சிற்றலைபோல், செல்லம் – தரவேண்டும்
கன்னத்தில் முத்தமொன்று; என்தேகம் மொத்தமும்
கன்னலாகும் அன்பில் கனிந்து.

40 என்னைப் பிடிக்குமா



என்னைப் பிடிக்குமா அன்றி மகளுனக்கு
அன்னை பிடிக்குமா என்றுகேட்டேன் – சின்னச்
சிறுக்கி இருவரையும் காட்டிச் சிரித்தாள்;
இறுக்கி அணைத்த படி.

41 தங்கக் கிளி



எங்கேநீ எங்கேயென்(று) உன்அன்னை தேடட்டும்!
வெங்கலத்தில் கூண்டுசெய்து, உன்னைநான் – தங்கக்
கிளியாக்கி என்னுடனே கொண்டுசெல்வேன், பாப்பா
ஒளிந்துகொள் கூண்டில் மறைந்து.

42

எப்போதும் ராணி

மரப்பாச்சி பொம்மை, மணியாரப் பெட்டி
மரச்சொப்புச் சாமான்கள் கொட்டி, – அரங்கேறும்
ஆட்டத்தில் எப்போதும் ராணி அவள்தானாம்;
போட்டியொன்றும் இல்லாப் பொறுப்பு.



43

கோலமெனச் சொல்வாள்

வேப்பிலைக் கொத்தெடுத்து முற்றம் பெருக்கிடுவாள்;
சொப்புக் குடத்தில்நீர் மொண்டு தெளித்திடுவாள்;
கோலமாவை வாசலில் அள்ளி இரைத்துவிட்டுக்
கோலமெனச் சொல்வாள் குழைந்து.

44 அடித்தாளா உன்அன்னை

அடித்தாளா உன்அன்னை பாதகத்தி; கையை
ஒடித்து விடுவோம்; அழாதே – பிடித்தவளைக்
கட்டிவைப்போம்; மன்னனிடம் சொல்வோம்; அதுவரை
விட்டுவைப்போம்; கண்ணீர் துடை.



45 என்மகளை அழச்செய்தாய்

விழச்செய்தாய் தண்தரையே! என்மகளை நீதான்
அழச்செய்தாய் வெட்கமில்லை; உன்னை – உழச்சொல்வேன்;
வெட்டிப் பெயர்த்தெடுத்து, பாதை அமைத்திடுவேன்
பட்டுத் துணியை விரித்து.

46 அற்ற உயிர்

திருவிழாக் கூட்டத்தில் என்மகளே நீயும்
ஒருநாள் வழிதவறிப் போனாய் – திரும்பக்
கிடைத்துவிட்ட அந்நேரம், அற்றஉயிர் மீண்டும்
அடைந்துவிட்டேன் உன்முகம் கண்டு.




47 ஊசிமட்டும் வேண்டாம்

தப்பாமல் மாத்திரை ஒன்றல்ல மூன்றுகூட
அப்பாநான் சாப்பிடுவேன் ஊசிமட்டும் வேண்டாம்;
வழிகின்ற கண்ணோ(டு) அவள்கெஞ்சும் போது,
விழிநனையும் தன்னால் எனக்கு.

48 மன்னிப்புக் கேட்கிறேன்

பொம்மையை வீசி உடைத்துவிட்டாய் என்றுதானே
அம்மையை கோபத்தில் தட்டிவிட்டேன் – வெம்பாதே
மன்னிப்புக் கேட்கிறேன் உன்னிடம்; இங்கேபார்
என்னைநீ பார்த்துச் சிரி.




49 பிறந்தநாள்

கொண்டாட்டம் கும்மாளம்; தோழருடன் சேர்ந்துநீயும்
வண்டாட்டம் ஆடிடலாம்; கண்திறவாய் – கண்ணே;
சிறந்தநாள் அன்றோ? மகளுனக்கு இன்று
பிறந்தநாள் அன்றோ விழி.

50 தஞ்சம் அடைகின்றாள்

அன்னை அடிக்க வருகின்ற போதெல்லாம்
என்னிடம் தஞ்சம் அடைகின்றாள்; – பின்னொருநாள்
தஞ்சம் தருமாறு கேட்கையில், கைவிரித்து
வஞ்சித்தால் எங்குய்வேன் நான்.




51 சிப்பி

தேடிநாளும் செல்வத்தைச் சேர்ப்பவர் போலமகள்
ஓடியோடி சிப்பிகளைச் சேர்க்கின்றாள்; – வாடிவிடக்
கூடாதே வெண்மணலில் என்றழைத்தால், கூப்பிடக்
கூடாதாம் சொல்வாள் சிவந்து.



52 வண்ணத்தில் நிழல்

எப்படி நான்புரிய வைப்பேன் மகளுக்கு?
சொற்படி கேட்பவள்தான்; சொன்னதை – அப்படியே
எண்ணாமல் செய்பவள்தான், இப்படிக் கேட்கிறாள்
“வண்ணத்தில் வேண்டும் நிழல்”.




53 சுவரெல்லாம் ஓவியங்கள்

வீட்டுச் சுவரெல்லாம் வண்ணத்தில் ஓவியங்கள்
தீட்டி நிறைத்துவிட்டாள்; யாரேனும் – கேட்டுவிட்டால்
அப்படித்தான் செய்வாளாம், சொல்கிறாள் அல்லிராணி;
எப்படித்தான் வந்ததோ வாய்.

54 பெயரால் விளிக்கிறாள்

வயதினில் மூத்தவர் போலென்னைக் கள்ளி
பெயரால் விளிக்கிறாள்; பார்க்கும் – அயலவர்
என்சொல்வார் என்றால் உனக்குப் பிடிக்குமென்(று)
என்னைப் பழிசொல்வாள் பார்.




55 கைமாத்து

மற்றவர் யாரிடமும் வேண்டுமெனில் கைமாத்து
பெற்றிடலாம்; பெற்ற மகளிடம் – பெற்றிடக்
கூடாது; காசைக் கொடுவென்று, எந்நாளும்
பாடாய் படுத்துகின் றாள்.

56 போர்க்குணம்

மகளிடம் போர்க்குணம் ஊற்றெடுக்க நானும்
மகளுடன் ஆடுகின்ற போதெல்லாம் வென்றிடத்தான்
எண்ணுவேன்;பின், தோற்றால் கலங்கிடுமே சின்னவளின்
கண்ணென்று தோற்பேன் முயன்று.

57 பொம்மைநான்



என்னிடம் வேண்டியதைக் கேட்டுப் பெறுவதற்கு
என்மகள் நன்றாய் அறிவாளே; – எந்நேரம்
எவ்விதம் பொத்தானை ஆட்டுவித்தால் பொம்மைநான்
செவ்வனே ஆடுவேனென்(று) ஆய்ந்து.

58 நன்றிமலர்

அப்பனென்று பேர்கொடுக்க என்மகளாய் வந்துதித்த
ஒப்பிலா மாணிக்க மாலையே; – தப்பாமல்
நன்றிசொல்வேன் பாமலரால்; முத்தமலர் தந்திடுவாய்
நன்றிமலர் சாற்றுவதை ஏற்று.




59 ஒன்றும் தெரியாத மக்கு

எத்தனையோ பட்டங்கள் நான்பெற்ற போதிலும்
இத்தனை ஆனந்தம் உற்றதில்லை; – பெற்றெடுத்த
என்மகள் வாயால் மகிழ்ந்துபெற்றேன் ‘எங்கப்பா
ஒன்றும் தெரியாத மக்கு’.

60 சித்தம் அழகியாள் ஆடுகிறாள் (கலிவெண்பா)

மொத்தம் இருந்தது மூன்று தலையணை;
சித்தம் அழகியாள் ஆடுகிறாள் – வைத்ததை
ஒன்றாய் இரண்டாய் வரிசையை மாற்றியே;
நன்றாய் நிகழட்டும் கூத்தென நானும்,
கவனம் இலாதவன்போல் பார்வையை மாற்றிக்
கவனித்துப் பார்க்கிறேன் கள்ளியின் செய்கையை;
ஏரெடுத்தும் பாராமல் ஆட்டத்தில் மூழ்கிவிட்டாள்;
தேரெடுத்து ஊருக்குள் சீறிவரும் மன்னவனும்
அன்னவள் போல்மனதில் ஆழமாய்ச் சிந்திக்கத்
தன்விரலால் கன்னத்தில் தட்டியிரான் அப்படி
என்னத்தைச் சொல்லுவேன்; ஆட்ட முடிவினிலே,
ஒன்றொன்றாய் மூன்று தலையணையும் சேர்த்துவைத்து
மெத்தைபோல் செய்ததன்மேல் பாய்ந்து விழுகின்றாள்;
சித்தவீரன் தண்ணீரில் பாய்வதுபோல், 'அய்யோ'
அடியெதுவும் பட்டுவிடக் கூடாதே என்று
பிடித்திட எண்ணியே நானும் விரைந்தருகே
செல்கின்றேன்; கண்ணடித்துப் பூஞ்சிரிப்பில் செல்லமெனைக்
கொல்கின்றாள் என்செய்வேன் நான்.





புத்த மதத்தின் **'சென்'** பிரிவு ஞானம் குறித்த எளிய கருத்தாழமிக்க **40 வெண்பாக்களின்** தொகுப்பு.

ஆசிரியர் குறிப்பு

- **ச. கந்தசாமி**, விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையை பூர்வீகமாகக் கொண்டவர்.
- திருநெல்வேலியில் பிறந்து வளர்ந்தவர்.
- தந்தை **சங்கரசுப்பு**, தாயார் **மல்லிகா**.
- தமிழ் இலக்கியத்திலும், பொது நிர்வாகத்திலும் முதுகலை பட்டம் பெற்றவர்.
- தமிழ்நாடு மாநில குடிமை பணி அலுவலரான இவர், மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் பணியாற்றி வருகிறார்.